ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

कथं तरेयं भवसिन्धुमेतं कावा गतिर्मेकतमोस्त्युपाय: ।
जाने न किंचित्कृपयाऽत्रमांभभो संसारदु:खक्षतिमातनुष्व ॥

ஸம்ஸாரமென்னும் பெயர்பூண்ட இக்கடலை எங்ஙனம் தாண்டுவேன்? இக்கடலில் மூழ்கியிருக்கும் எனக்கு யாது கதி? எவ்வித உபாயமிருக்கிறது என்று அற்பங்கூட நான் அறிந்துகொள்ளவில்லை. ஸமர்த்தரான ஹே! குருநாதரே கருணையால் என்னைப் பாதுகாரும் எனக்கேற்பட்ட ஸம்ஸார துக்கத்தை நாசம் பண்ணும்.

ஓர் சீடன் கருணைபொருந்திய தம்குருவினிடம் சென்றுவேண்டுகிறான். ஹே பிரபோ! ஸகலமான ஆபத்திற்கும் காரணமாய் விளங்கும் ஸம்ஸாரமென்கிற ஸமுத்திரத்தைத்தாண்டி அக்கரை செல்வதற்கு வேண்டிய ஸாதனம், உபாயம் ஒன்றையும் நானறியேன். தங்களுடைய கிருபையால் இக் கடலிலிருந்து கரையேற்றி என்னை இரக்ஷிக்கவேண்டும். இதனால் ஸகல ஜனங்களாலும் சுகமாய்க்கருதி யனுபவிக்கப்படும் இந்த ஸம்ஸாரமே சகல கஷ்டங்களுக்கும் காரணமென்றும், இதை சீக்கிரம் விலக்க முயற்சிக்கவேண்டுமென்றும், வெளியாகிறது. ஆகையால் தான் ஓர் பெரியவரும்,

संसारे रे मनुष्या वदत यदिसुखं स्वल्पमप्यस्ति किंचित ॥

ஹே மனுஷ்யர்களே! இந்த ஸம்ஸாரத்தில் மிகவும் அற்பமான சுகமாவது இருக்குமாகில் அதை வெளியிடுங்களென்று கீழுள்ள மூன்று பாதங்களால் ஸம்ஸாரத்திலிருக்கும் கஷ்டங்களை நிரூபித்து நான்காம்பாதத்திலிவ்விதம் கூறியிருக்கிறார்.

நமது தர்மம்.

29. நியாய சாஸ்திரம் என்பதெது ?

உலகில் காணப்படும் பதார்த்தங்களையும், அவைகளினிலக்கணங்களையும் பிரத்யக்ஷாதிப்ரமாணங்களையும், யுக்திபூர்வகமாய் ஸ்தாபிக்கும் விரிவான சாஸ்திரம். நியாய சாஸ்திரத்தை முதலியியற்றியவர் கணாதமுநிவரும், கௌதம முனிவருமாவர். (இந்த யுக்திசாஸ்திரத்தை எத்தனையோ வருஷங்கள் சிரமப்பட்டும் அறிந்துகொள்ளும் புத்திமான்கள் இக்காலத்திலும் துர்லபமாயிருக்க, முன்காலத்தில் நம்முன்னோர்களுக்கு புத்தி தெரியுமோ தெரியாதோவென ஸந்தேகிப்பவரின் பேதமையை யென்னென்று கூறுவது).

மீமாம்ஸையாவது யாது ?

வேதத்தில் கர்மகாண்டத்தில் கூறப்படும் மந்திரங்களுக்கு அர்த்தம், பிரயோஜனம், விநியோகம், தாத்பர்யம் முதலியவைகளை நியாயபூர்வகமாய்த்தீர்மானிக்கும் சாஸ்திரம், பூர்வமீமாம்ஸையெனவும் வேதத்தின் முடிவாகிய ஞானகாண்டத்தின் தாத்பரியத்தை நியாயபூர்வகமாய் ஸ்தாபிக்கும் சாஸ்திரம் உத்தரமீமாம்ஸையெனவும் பெயர்படும். இந்த உத்தரமீமாம்ஸைக்கே வேதாந்தமென்று பெயர். ஈசுவரனுடைய ஸ்வரூபத்தை உணர்த்தி ஆன்மாக்களை ஈசுவரஸ்வரூபமான மோக்ஷத்தில் சேர்க்கும் சாஸ்திரம் இதுவே. இதரமான எல்லாவேதபாகத்துக்கும்

மத்தை ஸகித்தாவது நியமந்தவராமலிருப்பது அவன் கடமையாகும்.

34. பிராம்மணனுக்கு அற்பாயசு முதலியது எதனுல் நேரும்?

வேதாப்யாஸமில்லாததாலும், சோம்பலாலும், சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்ட ஆகாரங்களை அருந்துவதாலும், பிராம்மணனுக்கு ஆயுஸ் குறைந்துவிடும் என்றும் ஆசாரத்துடன் ஆசிரமதர்மங்களைப் பரிபாலித்துவரின் ஸம்பூர்ணமான க்ஷேமங்களை யடைகின்ருன் என்றும் மநு சொல்லியிருக்கின்ருர்.

சீர் திருத்தம் வேண்டுவது ஏன்?

பிராம்மணர்களே! விழித்துக்கொள்ளுங்கள்!! யோஜியுங்கள்!!!

உலகம் படைக்கப்பட்ட காலம் முதல் ஜனக்கூட்டம் 4-பிரிவாகப் பிரிவமைந்து வளர்ந்துவருகிறது. அந்த நான்கு பிரிவுகளுக்குள் பிராம்மணஜாதி ஒன்று. இதர ஜாதிகளைவிட அதிகமான வேலை அவர்களுக்கு ஏற்பட்டு வந்திருக்கிறது. (1) அத்யாபனம்=இதரர்களுக்கு வேதசாஸ்திரங்களைக் கற்பித்தல். (2) யாஜனம்=பிறருக்கு யக்ஞம் செய்துவைத்தல். (3) ப்ரதிக்ரஹம்=பிறர் செய்யும் தானப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளல். இம் மூன்று விசேஷகார்யங்களிலிருந்து, பிராம்மணர்கள் லோக குருக்களாகவும் லோக ஆச்சார்யர்களாகவும் ஏற்படுத்தப்பட்டார்கள் என்று விளங்குகிறது. சில நாட்களுக்கு முன் சுத்த ப்ராம்மண தர்மத்தை ஆச்ரயித்துவந்த ஸ்ரீவேதாந்ததேசிகர் என்ற ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சார்யர் "ஸர்வதந்த்ரஸ்வதந்

த்ரன்" என்ற பட்டம் பெற்ருர். இதிலிருந்து ஒருஉண்மை வெளியாகிறது. ஆதிகாலம் தொட்டு எல்லா ப்ராம்மணர்களும் பலவித்தைகளையும் பல கலைகளையும் கற்று, உலகத்தில் எங்குமுள்ள எல்லாமனிதர்களுக்கும் அவரவர்களுக்குவேண்டிய கைத்தொழில் முறைப்படி போதித்து வந்திருககிருர்கள் என்றும் எல்லோர்க்கும் வேதாந்தமார்க்கத்தை உபதேசித்து வந்திருக்கிருர்கள் என்றும், நாள் வரையில் பல கஷ்டங்களுக்குள்ப் பட்டதால் லோகாச்சாரியத்தன்மை வாய்ந்தோர் குறைந்து வந்து ஸ்ரீ வேதாந்த தேசிகரே கடைசியாக இருந்தவர் என்றும் தோன்றுகிறது.

சீர்கேடு நேர்ந்ததென்ன?

பிராம்மணர்கள் லோககுருக்கள் வேலையை விட்டதினுல், பிராம்மணர்களுள்பட எல்லாமனுஷ்யர்களும் வேதத்தை மறந்தனர்; தர்மத்தைச் சிந்திப்பதை விட்டனர்; குலத் தொழிலை ஒதுக்கினர்; கடைசியில் ஸாமான்ய தர்மாநுஷ்டானங்களையும் கைவிட்டனர். பிராம்மணர் சீர் கெட்டதால் உலகச் சீர்கெட்டது. உலகச்சீர்கேடு தெரிவதெப்படி என்ருலோ, மூடர்களுக்குப் பார்ப்பதெல்லாம் ஸரியாயிருப்பதாகத் தெரியும். யோஜிப்பவர்களுக்குத் தன் குற்றமும் உலகப்போக்கும் தெரியும். யோஜனை (நினைவு) தான் வேண்டும்.

மனிதன் என்ற நாமம் வகிக்கத்தகுமோ?

மனிதன் என்ற வார்த்தைக்கு யோஜிக்கிறவன் என்று அர்த்தம். யோஜனையுள்ள (சிந்திக்கிற) ஆதிமனுவின் குழந்தைகள் என்றும் பொருள். "आत्मा वैपुत्रनामासि" (தனது ஆத்மாவே பிள்ளையாக ஜனிக்கிறது) என்று மறைமொழிகூறுவது போல், மனுவின் குழந்தைகளாகிய நாம் மனுவேயன்ருே? ஆதலாலாவது அம்மனுவைப்போல், நாமும் ஒவ்வொன்றையும் யோஜிக்க் (சிந்திக்க) வேண்டாமா? பகுத்தறிவு விருத்தி செயயக்கூடிய தன்மை வாய்ந்ததனுலல்லவா இதா

ஸர்வசாஸ்திரங்களுக்கும், கர்மாநுஷ்டானத்திற்கும், பக்திமார்க்கத்திற்கும் முடிவு இந்த சாஸ்திரமேயாதலால் இதற்கு வேதாந்த சாஸ்திரமென்று பெயர். இந்த மோக்ஷ சாஸ்திரத்தின் தத்துவத்தை யுணர்த்துவதற்காகவே சிவபெருமான் இப்பூவுலகில் சங்கராசாரியென்னும் திருநாமத்துடன் ஜகத்குருவாக அவதரித்தார்.

31. தர்மசாஸ்திரங்கள் அல்லது ஸ்மிருதிகள் எவை ?

வேதார்த்தங்களை ஸ்மரித்து எழுதியதால் ஸ்மிருதி எனவும், வர்ணாசிரமதர்மங்களைச் செவ்வையாய்க் கூறுதலால் தர்மசாஸ்திரம் எனவும் சொல்லப்படும், இவற்றில் முக்கியமானவை பதினெட்டு ஸ்மிருதிகளாம். அவையாவன மநுஸ்மிருதி, அத்ரிஸ்மிருதி, விஷ்ணுஸ்மிருதி, ஹாரீதம், யாக்ஞவல்கியம், ஔசநஸம், ஆங்கிரஸம், யமஸ்மிருதி, ஸம்வர்த்தலம், காத்யாயனம், பார்ஹஸ்பத்தியம், பாராசரம், வ்யாஸஸ்மிருதி, சங்கலிகிதம், தக்ஷஸ்மிருதி, கௌதமஸ்மிருதி, சாதாதபஸ்மிருதி, வஸிஷ்டஸ்மிருதி, இவைகளுக்கு பதினெட்டு உபஸ்மிருதிகள் உள்ளன.

வித்தைகள் யாவை ?

32. ஸாங்கோபாங்கமான வேதங்கள் நான்கும் உபவேதங்கள் நான்கும் அதன் ஆறு அங்கங்களும், புராணமும், நியாய சாஸ்திரம் என்னும் தர்க்கசாஸ்திரமும்,இருவித மீமாம்ஸையும், தர்மசாஸ்திரமுமாகிய இவை பதினெட்டும் வித்தைகள் எனப் பெயர்பெறும்.

33. பிராம்மணனுக்கு மற்றவர்ணங்களைவிட, அதிக க்லேசமான கர்மங்களும், நியமங்களும் ஸம்ஸ்காரங்களும் எதற்காக?

அவன் உலகத்தின் எல்லாவர்ணங்களின் க்ஷேமார்த்தமாய் வேதத்தையும் தபஸையும் ரக்ஷிக்கக் கடமைப்பட்டவனாக ஈசனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். பரிசுத்தமான வேததபஸுகளை தரிப்பதற்கு வேண்டிய ஆசாரத்தோடு இல்லாவிடின் உலகத்திற்கும் அவனுக்குமே கெடுதி நேரிடுமாதலால், அவன் சிர

சிருஷ்டி வஸ்துக்களிடத்திலிருந்து பிரித்துக்காட்ட மனிதர்கள் என்று நாம் அழைக்கப்படுகிறோம். ஒவ்வொன்றையும் ஆராய்ந்து நன்மை தீமையைப் பகுத்தறியும் சக்தியலல்லவோ புத்தி விருத்தியாகும். இச்சமயம் தானே நாம் யோஜனை உடையவர்கள் என்று சொல்லப்பட அர்கர்கள். ஆகையால்த் தானே மனிதன் என்ற நாமம் வகிக்கும் தகுதி பெறுவோம். ஆதலால் உலகமும் நாமும் இன்னிலை பெற்றதேன் என்று சிந்தியுங்கள்?

நம் குறைவு என்ன ?

வேதத்திலும், ஸ்மிருதியிலும் சொல்லப்பட்ட பிராம்மண தர்மங்களை எல்லாம் விட்டுவிட்டோம் அல்லவா ? ஸந்தியாவந்தனம் மட்டும் செய்துகொண்டிருக்கிறோமே, கர்ப்பாதானம் முதல் பிரேதகர்மாவரையிலுள்ள ஸம்ஸ்காரங்களையும் செய்துகொண்டிருக்கிறோமே என்று ஆத்திரத்துடன் கூறும் அந்தணர்கள் உண்டு. அவர்களுக்கு யான் கூறும் பதில் "நன்றாய் யோசித்துப் பாருங்கள்' என்பது தான். ஸந்தியாவந்தனம் ஒழுங்காகச் செய்யவில்லையே! மகாமந்திரமான காயத்ரீயின் தேவதையை ஆவாஹனம் செய்து வைத்துவிட்டு அந்தத் தேவியைச் சற்றும் கவனிக்காமல் இதரப் பொருள்கள் ஒவ்வொன்றிலும் மனதைச் செலுத்திவருகிறோமே. இதனால் அந்தத் தேவியின் கோபத்துக்கும் சாபத்துக்கும் உள்ளாகிறோமே! ஸம்ஸ்காரங்களைச் செய்யும்போதெல்லாம் ஸம்ஸ்காரம் எதற்காகச் செய்யப்படுகிறதோ அதைப்பற்றி மனதில் சிந்திப்பது வழக்கமுண்டா ? ஏன் பொய் சொல்லுகிறீர்கள். முதல் ஸம்ஸ்காரமாகிய கர்ப்பாதானம் ஒழுங்காக ஏற்பட்டால் பிராம்மணகுலம் இந்த மித்யாவாத ஸ்திதியைப் பெற்றிருக்குமா ?

கர்ப்பாதானச் சீரழிவு இட்ட பயன் ?

கர்ப்பத்தில் விரைபோடுமுன்னமே அதினாலுண்டாகும் குழந்தையின் ஜாதகத்தை எழுதி நிஷேக சாலையின் உயர்மேஜையில் வைத்துவிட்டுப் பறகு அதே லக்னத்தில் தர்மபத்னியிடம், தீர்க்கவிரதத்துடன பூர்ண்மாய் வளர்த்துக் காப்பாற்றிய

விரையை (பீஜத்தை) சுத்தமான க்ஷேத்திரத்தில் (கர்ப்பத்தில்) விரைத்துவிடவேண்டிய பிராம்மணன்—தர்ம அர்த்த மோக்ஷத்தை மறந்து, காமத்தையே மனதில்கொண்டு அகாலத்தில் அசுத்தக்ஷேத்ரத்தில் தெளிப்பதினாலல்லவா பிராம்மண்யம் துலைந்தது. பிராம்மண ஜன்மங்கள் கீழ்வர்ணங்களிலும் உண்டாயின. கீழ்த்தரமான ஜன்மங்களும் வெளிநாட்டு பீஜங்களும் பிராம்மணர் குலங்களில் திரும்பிவிட்டன. பிராம்மண குலங்ககளில் அசட்டுக் குழந்தைகள் பிறப்பது கர்ப்பாதானக்கேடல்லவோ? குஷ்டரோகிகளும் தீராரோகிகளும் அவலக்ஷணக்குழந்தைகளுமுண்டாவது கர்ப்பபீஜக் கோளாறு அல்லவோ? அல்பாயுஸுக்குழந்தைகள் உண்டாகி ஊரார் வீட்டுப் பெண்களை பால்ய விதவைகளாக ஏற்படுத்திவைப்பது கர்ப்பச்சீரழிவு அல்லவோ? இவ்விதம் நாம் செய்வதாகப் பாவித்துவரும் ஒவ்வொரு வைதீக லௌகீக கார்யங்களையும் பரிசோதித்து ஆழ்ந்து யோஜித்துப் பார்த்தால், அததின் தோஷங்கள் நன்றாய்த் தெரியும். அப்பொழுதுதான் நாம் புண்ணிய கர்மாக்கள் செய்யும்பொழுதே நாம் செய்துவரும் பாபஸமூகங்களை அறியமுடியும். இவ்விதம் அறிந்தபின், நாம் ஏன் இவ்விதம் செய்கிறோம் என்ற விசாரம் உண்டாகும்.

இதுவல்லவா ஆத்மவிசாரத்தின் முதல்.

இந்த விசாரம் உண்டாகாததற்குக் காரணம் கர்மாவில் சிரத்தையில்லை. சிரத்தையில்லாமற் போனால் மனம் அதில் செல்லுமா. மனம் பற்றாதகர்மா பலன் அளிக்காது என்று மனுநீதி கூறுகின்றதே. சொல்லிச் சொல்லி ஆவது என்ன?

இப்பொழுது செய்யவேண்டுவதென்?

என்பதை அடியான் சிறு புத்திக்கெட்டியதைச் செப்புகின்றேன். பெரியோர் மனம் செலுத்திடில், விசேஷ விஷயங்கள் தோன்றக்கூடும். நாம் ஆதிநாளையில் எவ்விதம் வாழ்ந்து வந்தோம்? என்ன கர்மங்கள் செய்துவந்தோம்? எவ்வித மனப்பான்மை பெற்றுவந்தோம்? என்று பலமுறையும் உண்மை

யாய் அறியவேண்டும். பிறகு இப்பொழுது நம் மனதும் வாக்கும் சரீரமும் எவ்வளவு தூரம் சுத்தியுள்ளதாக இருக்கிறதென்று பொய் நினைவில்லாமல் சிந்தித்தறியவேண்டும். வேத கர்மாக்கள், ஸ்மிருதிகர்மாக்கள், தர்மாசரணைகள், ஸாமான்ய தர்மங்கள், வர்ணதர்மங்கள், ஆச்ரமதர்மங்கள், வேதாந்த அறிவு, உலக அறிவு, பந்துஸ்நேஹமுறை. பெற்றோர், உற்றோர் ஸம்பந்தம், விவாஹமுறை முதலிய பலதுறைகளிலும் நம்முடைய கடமையைச் செலுத்திவருகிறோமா? என்று ஆழ்ந்து யோஜிக்கவேண்டும். இதின்பிறகு முன்னிலையிலிருந்து இந்நிலைக்கு வந்த காரணங்களை நன்றாய் ஆலோசிக்கவேண்டும். சாஸ்திரங்களினின்றும் ஸம்பிரதாயம் வந்ததேன்? என்றும் யோஜிக்கவேண்டும் !!! இவ்வளவு அறிந்துகொண்டே ஸ்மிருதிகளுக்கே விரோதமில்லாமல் என்ன சீர்கள் அநுஷ்டிக்கவேண்டும்? முன்னிலையை அடைய என்ன என்ன ஆசரிக்கவேண்டும்? எவ்விதம் நம்மைத்திருத்திக்கொள்ளவேண்டும்? என்று தீர்மானித்துக்கொண்டு ஒவ்வொன்றாக தைரியமாகச் சில பேர்களாவது முதலில் அநுஷடானத்துக்குக் கொண்டுவர பிரயத்தனப்படவேண்டும்- முன்னிலை, பின்னிலை, நம்நிலை, வருநிலை இவையனைத்தையும் சேர்த்து ஒவ்வொருசீராக ஆராய்ந்து வருவோம். இந்த எனது முயற்சியில் எல்லோருக்கும் பாத்தியமுண்டு என்பதை எல்லோரும் ஒப்புத்துக்கொள்ளவேண்டும். இதைக்கொண்டு ஆலோசிக்கவேண்டும். அலக்ஷிய நோக்கத்தையும் உதாஸீன பாவத்தையும், அதைரிய பாவத்தையும், கண்டன எண்ணத்தையும், அகாரண ஸமர்த்தனபுத்தியையும் விட்டுவிட்டு, சில பிராம்மணர்களாவது (தத்துவத்தை) உண்மையை ஆராய்ந்தறிய ஹிருதய காருண்யத்துடன் சிந்திக்கவேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகின்றனர்.

(க) ஸந்தியாவந்தனம்.

வேதம் உத்தரவிட்ட கர்மங்களில் பாக்கியிருப்பது ஸந்தியாவந்தனம் ஒன்றுதான். இது ஒன்றுதான் த்விஜன் என்பத

ற்கு அடையாளமாக இருக்கிறது. ஆதிகாலத்திலிருந்து ஸந்தியாவந்தனம் ஸரியாகச் செய்யப்பட்டு வந்தது என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். இப்பொழுது ௱(100)க்கு ௯௯(99) பேர்கள் வந்தனம் ஸரியாகச் செய்யவில்லை என்பதையும் ஒருவரும் மறுக்கமாட்டார்கள். இது செய்யவேண்டியது அவசியம் என்பதைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவேண்டியதில்லை. ஸந்தியாவந்தனம் பண்ணவேண்டிய கிரமம் அநேக புஸ்தகங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சந்தி ஏன் செய்யவேண்டும்? பண்ணுவதால் யாது பயன்? பண்ணாவிட்டால் என்ன? என்ற விஷயங்கள் அவசியம் எவரும் அறியவேண்டியது. இதை அறிந்தபிறகுதான் யுக்தி அதிகங்கொண்ட மனப்பான்மையடைந்த மக்களுக்கு சிரத்தை உண்டாகும். ஆனால் இவ்விஷயங்களை ஈண்டு விரிப்பது தகுதியல்ல என்று நினைத்துவிடுத்தனம். † சந்தியாவந்தனம் செய்யும்பொழுது கவனிக்கவேண்டியவற்றை மட்டும் சற்றுக்குறிக்கின்றனம்.

1. வாக்கினால் சொல்லும் ஒவ்வொரு மந்த்ர வார்த்தைகளின் அர்த்தத்தையும் முழுவசனங்களின் பொது அர்த்தத்தையும் தாத்பர்யத்தையும் மனதின் ஒருபாகம் சிந்திக்கவேண்டும்.

2. மனதை மூளையினின்றும் இழுத்துவந்து ஹிருதயகமலத்துக்குள் இருத்திவைத்து அம்மனதின் ஒருபாகம் அத்தாமரையிடையிலுள்ள ஜோதிர் பிரும்மத்தை நினைத்திருக்கவேண்டும்.

---

† இந்த வியாஸகர்த்தாவினால் வெளிப்படுத்தப்பட்டு தஞ்சாவூர் பட்கோஸ்வாமி வட்டாரம் ரங்காச்சாரியாரிடம் 6-அணுவுக்கு கிடைக்கக்கூடிய 'ஸநாதனமதம்' என்ற புஸ்தகத்தில் இவ்விஷயங்கள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன.

3. மனதின் ஒருபாகம் யாரை உத்தேசித்து எந்தக்கார்யம் அவ்வப்போது செய்கிறோமோ அவ்வப்போது அங்கங்கே பதிந்திருக்கவேண்டும்.

4. ஒவ்வொரு காரியத்தின் பலனை அனுபவிப்பதாக மனத்தின் மறுபாகம் நினைத்துப் புதுஸந்துஷ்டியடையவேண்டும்.

5. முக்யமாக காயத்ரீ ஜபகாலத்தில் அவசியம் கவனிக்கவேண்டியவைகள் பல உண்டு. (அ) நம்மை ரக்ஷிப்பவர்கள் என்று நாம் நம்பியிருக்கும் கௌரவமுள்ள பெரியோர்கள் ஒருவர் நம் அகத்துக்கு வந்தால், அப்பொழுது நாம் எவ்வளவு பயபக்தியுடன், மனதை வேறு கார்யத்தில் செலுத்தாமல் மெய்மறந்து, மிருதுவான தணிந்த வாக்குடன் அர்க்ய, பாத்ய, ஆசமனீய, ஸ்நானீயம், போஜனம் முதலிய விசேஷ உபசாரங்கள் செய்கிறோமோ, அதுபோலாவது உலகத்துக்கு ஏகமாதாவாகிய தேவி காயத்ரியை ஆவாஹன ஜபகாலத்தில் தியானித்து உபசரிக்கவேண்டும். (ஆ) ஜபஸமயத்தில் ஹிருதயத்தில் ஆவாஹிக்கப்பட்டிருக்கிற காயத்ரி தேவதையை மனம் தியானித்துக்கொண்டே இருக்கவேண்டும். வாக்கு மந்த்ரத்தை ஸ்பஷ்டமாய் உச்சரிக்கவேண்டும். உடல் இதரகாரியங்களில் ஏற்படாமல் மெய்மறந்து இருக்கவேண்டும். (இ) ஜபம் ஆரம்பம் முதல், முடியும் வரையில் நாம் பிரார்த்தித்து மனனம் செய்யும் புத்தி நமக்கு அதிகரித்துவருகிறதாக நிச்சயமாய்ப் பாவித்துக்கொண்டே வரவேண்டும்.

விழித்துக்கோள்ளுங்கள்! யோஜியுங்கள்!!

ஸ்ரீவேதாந்த ஆச்ரமம்,
௫௦உ௫-ஷுசித்திரைமீ
௩உ

ஸாரம், ரங்கஆச்சார்யன்,
தஞ்சாவூர்.

ஆசாரியனும் தேவனும்.

(உ௪0-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதம் கடவுளையும் ஆசார்யனையும் ஒன்ருய்ப் பாவித்து நமது உயிரையும் அதற்கும் மேலாய் நினைத்தபொருளையும் கூட ஸமர்ப்பணம் செய்து பரமசிரேயஸ்ஸை அடைந்து அவர்கள் தங்கும் ஸ்தானத்தையும் கற்கோட்டையாய்க் கட்டினல் நமக்கு க்ஷேமமுண்டென்று சில கைங்கர்யம் செய்தும், அவர்கள் ஆராதனை செய்வதே நம் உலகத்திற்கே க்ஷேமமென்று கருதி ஈசனைக்காட்டிலும் பெரியவர் ஆசார்யரென்றெண்ணி அவர்களிடமிருந்து நேரில் அனுக்கிரகம் பெற்றவர் பலர். இத்தகைய ஆசார்யர் தனக்குத் தன் குருராஜரால் ஏற்பட்ட ஸ்தானத்திலிருப்பதுபோல் அப்போதப்போது லோகானுக்கிரகார்த்தம் வெளியிலும் ஸஞ்சாரம் செய்து ஆங்காங்கு சிஷ்யகோடிகளுக்கு நல்லுபதேசம் செய்துகொண்டும் வருகிருர். அப்படியாத்திரை செய்யு மிடத்துள்ள பிரபுக்கள் தங்களுக்கு மிகப்பிரியமுள்ள தனத்தைத்தன் சக்திக்கும் மீறித்தான் கொடுக்கவேண்டும். அதனைப்பெற்ற கருணமூர்த்தி ஏழைகளுக்கும் கற்றவர்களுக்கும் உபயோகப்படுத்துவார்கள். அதை "அவ்விதம் செய் இவ்விதம் செய்யாதே" என்று சொல்ல மனிதரான நமக்கு அதிகாரமல்ல. இவ்விதமெல்லாம் சிரேயஸ்ஸைப் பெற்றுக்கொண்ட நம் பெரியோர்களின் வம்சத்திற் பிறக்கும் பாக்கியம் பெற்ற நமக்கும் அவர்களது கருணையேகிடைக்குமென்பதிலையமில்லை. ஆனல் காலதோஷத்தால் இத்தகைய குரு பீடத்திற்கும் நம் தேவாலயத்திற்கும் நேர்ந்திருக்கும் ஆபத்தைப் பற்றி இனி அவசியம் கொஞ்சம் வெளியிடவேண்டியது அவசியமாய் நேர்ந்துவிட்டது பற்றி அதனைப் பற்றி அடுத்துவிசாரிப்பாம்.

ஆரியர்களே! நான் முன்கூறியபடி ஈசனுக்கும் ஆசிரியனுக்கும் ஒரு விதத்திலும் பேதமே இல்லையென்றேற்பட்டது. அப்படியே நாம் இதுகாறு மனுபவித்து வந்துளோம். அப்படியிருக்க சமீபத்தில் மதிருஸ் கவர்ண்மெண்டில் கனம் மந்திரியவர்களால் ஓர் சட்டம் ஹிந்துக்களது தேவஸ்தானம், மடம் முதலிய தர்மசொத்தின் விஷயமாய்க் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும் யாவருமறிந்த விஷயமே. இதன் சொரூபமும் இதனைக்கொண்டுவந்தவர்களது எண்ணமும் இது. அதாவது— நமது தேவஸ்தானம் மடம் முதலிய தர்மஸ்தானத்தின் சொத்தைப் பாதுகாக்க இதுவரை சரியான சட்டம் இல்லாததால் அந்த சொத்துக்கள் பலவிதத்தாலும் துர்வினியோகத்தில் போகிறது. அதனல் அதை எந்த உபயோகத்திற்காக நம் பெரியோர்கள் எழுதி வைத்தனரோ அத்தகைய கார்யம் அதனுல் நடைபெறவில்லை. அதனுல் அதை எழுதிவைத்தவருக்கும் புண்ணியமில்லை. அதை உட்புகுந்து பார்க்கும் நமக்கும் மனது புண்படுகிறது. ஆதல்பற்றி இதுபோன்ற பல துன்பங்களை நிவர்த்தி செய்ய அடியில் வருமாறு ஓர் சட்டம் கொண்டு வரவேண்டுமென்பதே அதன் பூர்வபீடிகை. இச் சட்டத்தின் சொரூபம் பல பிரிவுகளால் விரிக்கப்பட்டிருக்கிறது. அதை வரிசைக்கிரமமாய் இங்கு விஸ்தரிப்பதில் நமக்குப்பயனில்லை. மற்றும் பத்திரிகையிலும் வீணுய் இடம் அடைக்கும். ஆதல் பற்றி முக்கியமான விஷயத்தை மட்டிலும் தெரிவித்து அதன் ஸாதக பாதகத்தை கவனிப்பாம்.

மடம் சொத்துப் பலவிஷயங்களில் அனுவச்யமாய்ச் செலவு ஆவதால் அதற்காக ஆங்காங்கு ஓர் மேல்அதிகாரி கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்படும். அவரிடம் மடாதிபதிகள் வரவு செலவு திட்டத்தை ஒப்புவிக்கவேண்டுமாம். இது ஒன்றைமட்டிலும் கவனிப்பாம். நான் முன் சொன்னபிரகாரம் மடாதிபதிகளென்றல் கடவுள் தானென்றோம். அதற்கு மேலாய்க்கூட எண்ணவேண்டுமென்றுப் தெரிவித்திருக்கிறேன். சாஸ்திரசித்தாந்தம் இவ்விதமிருக்கிறது. இத்தகைய மடாதிபதிகளுக்கு மே

லாய் வருபவர் ஒருவர் ஆஸ்திகசிரோமணியாயும் இருக்கட்டும். இது நம் சாஸ்திரத்திற்கு அடுக்குமா, ஈசன் உலகினில் ஸ்வதந்திரனென்றால் அவன் கண்டபடி செய்யாமலிருக்க அவனை அடக்கி ஆள மேல் ஒருவன் நியமிக்கப்படுவானா? ஆனால் மடாதிபதிகள் கெட்டவழிகளிற்சென்றால் அவர்களைக்கேட்கத்தான் வேண்டாமாவென்று கேட்கலாம். இதுகேட்கத்தக்கதே. ஆனால் அதற்காகச் சட்ட பூர்வமாய் ஒரு அதிகாரி வந்துதானாக வேண்டுமென்பதல்ல. அது நமது வேலை, இதை ஆபஸ்தம்பர்,

गुरोर्नियमातिक्रमं रहसि बोधयेत् ।

குருவானவர் தனது நியமத்தை மீறுவாரானால் அதை ரகஸ்யத்தில் திருத்தவேண்டுமென்றார் அப்படிச் சொல்லியும் கேட்காவிடில் தர்மசாஸ்திரகாரர்,

गुरोरप्यवलिप्तस्य कार्याकार्यमजानतः ।
उत्पथं प्रतिपन्नस्य परित्यागो विधीयते ॥

கர்வம் கொண்டு கார்யம் அகார்யமென்பதைத்தெரிந்து கொள்ளாமல் கெட்ட மார்க்கத்திலேயே குருவானவர் சென்றால் அவரை அந்தஸ்தானத்திலிருந்தும் தள்ளி விடலாம் என்கிறார். ஆகவே அத்தகையோரை சிக்ஷிக்க நமது கையிலேயே இருக்கும்போது ராஜாங்கத்தில் பிரார்த்திக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியும் இப்போது நம் தென் இந்தியாவிலிருக்கும் மடங்களிலுள்ள மடாதிபதிகள் மீறிநடப்பதாய்த்தெரியவில்லை. இரண்டொரு மடம் இருப்பதாய் சந்தேகத்திற்கிடமானாலும் அவர்களை நாம் நேரில்ப்போய் அப்டியிருப்பது நியாயமில்லையென்று ஞாபகப்படுத்தி வழிக்குத்திருப்பலாம். அப்படித்திருந்தாமலிருந்தால்இதற்குமுன்னிருக்கிறசட்டத்தாலேயே அவரை விலக்க வழிஇருக்கும்போது இத்தகையரூல் அவசியமேயில்லை. இரண்டொருமடாதிபதிகள் சந்தேகத்திற்கிடமுள்ளவர்களென்பதைக்கொண்டு எல்லோரும் இப்படித்தான் இருப்பார்கள் என்று நினைப்பதைப்பார்க்கிலும் அநேகர் நல்லமுறையிலிருப்ப

தை ப்பார்த்து எல்லோருமிப்படித் தானி ருப்பார்களென்று தான் பொதுவாய்ப்பார்க்கும் ஸ்வபாவம் நம்முன்னோர்களிடமிருந்ததே இதுபரியந்தமும் நாமும் அப்படியேஇருந்ததன் காரணம். ஆகவே இந்தச்சட்டம் நமக்கு அவசியமில்லையென்பதே விளங்கும். மற்றும் இதனுல் வரும் பாதகத்தை கவனிப்போம் நம் பரமாசார்யமூர்த்திகளின் மடத்தில் இவர்கள் மேலதிகாரியாய்வந்து உட்கார்ந்தோ அல்லது பரமாசார்யரையே டிரஸ்டியாய் நியமித்தோகார்யம் நடக்கவேண்டுமென்பது சட்டமாம். இப்படி யாகும்போது நம் ஆசார்யர்கள் காலே முதல் அனுஷ்டானம் செய்து மத்தியானத்தில் லோகக்ஷேமார்த்தம் பூஜைக்கு ஆரம்பித்து சுமார் 2-மணி வரைபூஜை ஆராதனம் செய்கிருர்கள். அதற்குமேல் பிக்ஷை செய்து கொண்டு அதன் பிறகும் சிரமம் என்பதில்லாமலே அங்கு முக்கியமாய்த் தரிசிக்கவரும் ஆஸ்திகர்களோடு மதவிஷயமான ரகஸ்யங்களைப்பற்றியே பேசிக்கொண்டு பிறகு ஸந்தியா காலானுஷ்டானத்திற்குப் பிறகும் பொது ஜனங்களின் பிரார்த்தனைக் கிணங்கி திவ்ய உபன்யாஸ உபதேசமாரிபொழிந்து யாவரையும் திருப்தி செய்கின்றனர். பிறகும் பூஜானுஷ்டானங்களைச் செய்து இரவில் மனுஷ்யதேகத்திற்கேற்ற உபசாரத்திற்காகசொல்பநேரம் தலை சாய்த்திடுவார்கள். பிறகும் 4-மணிக்கே விழித்துக்கொண்டு தினசர்யையை ஆரம்பிக்கிருர்கள். இப்படி ஈசுவரகைங்கர்யத்தினுலும் லோகோபகாரத்தாலும் காலம் கழித்துவரும் இம்மகான்கள் இனி இக்கார்யங்களை யெல்லாம் கட்டி சமுத்திரத்திலெறிந்துவிட்டு தினம் முழுமையையும் பட்ஜட்போடுவதிலும் வரவு செலவு எழுதுவதிலும் போக்கிக்கொண்டும் மேலர்விலிருந்துவரும் உத்திரவுகளை கவனித்து அதற்குபதில் எழுதிக்கொண்டும் இருக்கவேண்டியதைத்தவிர, வேறு கார்யமேற்படுமாவென்பதைகவனித்துப்பாருங்கள் நான் சமீபத்தில் இந்தச் சட்டத்தை சாதகமென்று வாதிக்கும் ஓர் கனவானிடத்திற் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கேட்டதாவது. நம் பக்கங்களில் இப்போது சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும்

கும்பகோணம் ஸ்வாமிகள் இதுவரையிலும் சுமார் 5. 6. லக்ஷம் ரூபாய் வசூல் செய்து விட்டாரே. இது என்ன பொதுப்பிரயோஜனத்திற்குப் பிரயோசனபபட்டது என்று கேட்டார். நான் தாங்கள் நினைக்கும் பொதுப் பிரயோசனமென்பது எது என்று கேட்டேன். அவர் மதுரைக் காலேஜுக்கு பண்டு கொடுத்து அவர் பெயரால் ஹாஸ்டல் கட்டினுல் அது தான் பொதுப்பிரயோசனம் என்றார், நான் என்ன சொல்வேன்! ஆசார்யர் பெயரால் ஹாஸ்டல் கட்டவேண்டுமா? அவர்களுக் பெயரே இல்லே. அந்தஸ்தானத்திற்கு வருபவர்கள் தங்கள் பெயரையும்ஊரையும் யக்ஞோபவீதத்தோடேயே கழற்றி எறிந்துவிட்டு சங்கராசார்யர் என்று ஆதிபகவத் பாதரது பெயரையே வைத்துக்கொள்கிறார்கள்.

அவர்களது பெயரால் உலகில் சஞ்சரிப்பதோடு அவர்கள் எதை தர்மமென்று ஸ்தாபித்தார்களோ அதையே கவனித்துக் கொண்டு போகும் இம்மஹான்கள் ஆதிபகவத்பாதர் பெயரை வைத்து ஹாஸ்டல் ஸ்தாபிப்பது எம்மட்டிற்கு நியாயமாகும். அல்லது இது வேதவிகித தர்மமா? அல்லது இதை ஸ்தாபிப்பதால் நமது வேதமும் சாஸ்திரமும் தழைத்தோங்குமா வென்று பதிற்கூறினேன். அவர் அஸம்மதத்தின் பேரிலேயே அதை நிறுத்தினாரேயொழிய திருப்தியாய் நிறுத்தவில்லை.

பாருங்கள் இந்தச்சட்டம் அமுலுக்கு வந்துவிட்டால் நம் வேதசாஸ்திர தர்மம் நடக்குமா? பக்தகோடிகளுக்கு அன்னமளித்ததில் இவ்வளவு செலவு. ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலிய பாஷைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களுக்கு வெகுமதியளித்ததில் இவ்வளவு செலவு என்றெல்லாம் கணக்கெழுதி அனுப்பினால் அவர்களேற்றுக்கொள்வார்களா. அப்படி சாப்பாடுபோடுவதில் ஒருஜாதியாருக்குமட்டிலும் பிரயோஜனம் அதிகமாய்ப் போவதால் பொதுப்பணத்தை அப்படிச்செலவு செய்ய ரூல் இடம் கொடுக்கவில்லே என்று ஷரா எழுதுவார்கள். பிறகு அதை நிறுத்தவேண்டும். இப்படியேஎன்னென்ன வரலாமென்பதை புத்திமான்கள் ஊகித்துக்கொள்வார்கள். இந்த அக்கப்போர்களேயே கவனிக்கநேரும்போது அம்மகான்களது மனது

என்ன நிலையிலிருக்கும். எவ்விதம் லோகோபகாரம் செய்வார்கள். இவர்கள் நினைக்கும் உபகாரமே லோகோபகாரமென்று கொண்டு அந்த லோகோபகாரத்தி லிறங்கட்டுமே யென்றால் அது இப்போதிருக்கும் ஆசார்யர்களுக்கு ஸாத்தியமாகாது.

இவர்களுக்குப்பிறகு வரும் பாத்தியக்காரர்கள் அப்படி நுழையலாமோ என்னவோ. அப்படி அவர்கள் நுழைந்தால் அது நமது பரமாசார்ய சந்ததியைச்சார்ந்ததென்று ஒப்புக்கொள்வது சுலபமல்ல. அவர்களால் வேதமும் சாஸ்திரமும தழைத்தோங்காது. பிறகு அது லௌகிகமடமாயும் மீடிங்குகளிலும் பொதுக்கூட்டங்களிலும் அக்கிராஸனம் வகிக்கும் ஸ்வாமிகளாவார்கள். அவர்களை உத்தேசித்து இனி பாதகாணிக்கை ஸமர்ப்பணம் செய்யமாட்டார்கள். பிறகு மடத்திற்கு வரும்படி எவ்விதத்தில் வரும். இம்மடாதிபதிகள் செய்யும் பொது நன்மைக்கே இக்காலத்திலனேக மகான் கங்கணம் கட்டிக்கொண்டு திரியும்போது இம்மடந் தானெதற்கு? இப்படியெல்லாம் படிப்படியாய் ஏறக்கடைசியில் ஐயோ ஆசார்யபரம்பரை அற்றுவிடும். ஆசார்யனில்லாதபோது மதப்பற்று நமக்குக்குன்றிவிடும் இப்போதே வர்ணாசிரமம் வேண்டாம். வேதத்தில் சில பாகம் ஒப்புக்கொள்ளலாம். பெரும்பாகம் பிரயோஜனமில்லையென்றும் போதுபோகாமல் சாஸ்திரமென்று கண்டதையெல்லாம் ரிஷிகள் எழுதிவைத்தார்கள். ஸ்திரீகளை அநியாயமாய் அடிமையாய் ஆக்கினார்களென்றும் யுக்தி சொல்லும்போதே ஆசார்யாற்ற உலகத்தில் என்ன நடைபெறுமென்பதை தீர்க்கமாய் ஆர அமரயோசித்துப் பாருங்கள். இதை இப்படியே சொல்லிக்கொண்டு போனால் விரியும். இவ்விதமே தேவஸ்தானத்திலும் நுனி முதல் அடிபரியந்தமும் சட்டத்தையே அநுஸரித்து நடக்கும்வேலைக்காரர்களே வருவார்கள். அதினின்றும் உத்ஸவம் முதலிய விமரிசை நன்கு நடைபெறாது. தர்மஸொத்தெல்லாம் இப்படியா போகவேண்டும்? இதுவா தர்ம பரிபாலனக் கிரமம்?.

(இன்னும் வரும்.)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரி.